

தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம், கிராம பகுதிகளில் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

# நீங்கள் அளித்த வாக்கால்தான் 20 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்!

## திருவெறும்பூர் தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

திருவெறும்பூர், ஏப்.15-

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 37வது வார்டு பகுதிகளில், தி.மு.க. வேட்பாளரும் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்களிடையே அவர் ஆற்றிய உரையின் சிறப்பம்சங்கள்:



திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அமைய மக்கள் வாக்களித்ததன் காரணமாகவே பல்வேறு திட்டங்கள் சாத்தியமானதாக அவர் குறிப்பிட்டார்.

**காலை உணவுத் திட்டம்:** தமிழக முதல்வரின் கனவுத் திட்டமான காலை உணவுத் திட்டத்தின் மூலம் இன்று 20 லட்சம் மாணவர்கள் பசியின்றி பள்ளிக்குச் செல்கின்றனர். “நீங்கள் அளித்த ஒரு வாக்கினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அன்பில் மகேஸ் மூலமாக இத்தனை மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்” என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

**மகளிர் நலன்:** பெண்களுக்கான இலவச விடியல் பயணத் திட்டம் மற்றும் மகளிர் உரிமைத் தொகை ஆகியவை மக்களின் வாக்குகளால் கிடைத்த நன்மைகள் என்றார்.

**வார்டு 37க்கான வளர்ச்சிப் பணிகள்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் 37வது வார்டு பகுதியில் மட்டும் 12 கோடியே 56 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள், நியாயவிலைக் கடைகள், அங்கன்வாடி கட்டிடங்கள் எனப் பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகப் புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

**வாக்குறுதி நிறைவேற்றம்**

கடந்த 2021 தேர்தலில் மாதா கோவில் தெருவில் வாக்கு சேகரித்த போது, முதியவர் ஒருவர் சாலை வசதி குறித்துக் கேட்ட கோரிக்கையை நினைவு கூர்ந்தார். “அன்று கொடுத்த வாக்குறுதிப்படி, வெற்றி பெற்றவுடன் அந்த சாலைப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் முடித்துத் தந்துள்ளேன்” என்றார்.

**எதிர்க்கட்சி vs ஆளுங்கட்சி**

தன்னுடைய செயல்பாடுகள் குறித்து வெளிப்படையாகப் பேசிய அமைச்சர்:

“நான் எதிர்க்கட்சி எம்.எல்.ஏவாக இருந்த போது நீங்கள் வைத்த 10 கோரிக்கைகளில் 3 கோரிக்கைகளை மட்டுமே நிறைவேற்ற முடிந்தது. ஆனால், தற்போது ஆளுங்கட்சி அமைச்சராக 7 கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளேன். விடுபட்ட இதர கோரிக்கைகள் அனைத்தும் திராவிட மாடல் ஆட்சி தொடரும் போது முழுமையாக நிறைவேற்றப்படும்.”

மேலும், ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மருத்துவ முகாம்கள் மற்றும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் மூலம் 15க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளின் வாயிலாக மக்களின் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார். எனவே, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துத் தன்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன் காட்டூர் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், வட்டக் கழகச் செயலாளர்கள் தவசீலன், விஸ்வநாதன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கும்பகோணம் சட்டமன்ற தொகுதியின் கழக வெற்றி வேட்பாளரும், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளருமான சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. கும்பகோணம் மாநகர பகுதியில் உள்ள நெசவு தொழிலாளர்கள் வீட்டிற்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், பகுதிச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பட்டு நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் இராஜா.ரகுபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26, 27, 35 ஆகிய மூன்று வார்டு பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் புதுக்கோட்டை தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வின்போது மாநகர துணை மேயர், புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் எம்.லியாகத்அலி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், வட்டக் கழகச் செயலாளர்களும், கழக முன்னோடிகளும், கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் 9 மற்றும் 10 வது கோட்டங்களில் வீதி வீதியாகச் சென்று கழக அரசின் சாதனைகளை கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பொன்னமாபேட்டை பகுதி செயலாளர் கேபிள் ராஜா, கோட்ட செயலாளர். லோகு மணிவன்னன் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

# மருத்துவர் இராமதாசு ஐயா விரைந்து நலம்பெற விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் விசாரித்தறிந்தார்!

சென்னை, ஏப். 15 -

**“மருத்துவர் இராமதாசு ஐயா அவர்கள் “விரைந்து நலம்பெற விழைகிறேன்” என்று அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**சேலத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த போது உடல்நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மருத்துவர் ஐயா டாக்டர் இராமதாஸ் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு நலம் விசாரித்தேன். அவர் நல்ல முறையில் உடல்நலம் தேறி வருகிறார்.**

**மருத்துவர் ஐயா அவர்கள் முழுவதுமாக குணமடைந்து, விரைந்து தமது பொதுவாழ்க்கைப் பணிகளைச் சிறப்புறத் தொடர்ந்திட வேண்டும் என விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# நாமக்கல்லில் நாமக்கல் இராணி வாக்கு சேகரிப்பு!

நாமக்கல், ஏப். 15-

நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வெற்றி வேட்பாளராக போட்டியிடும் நாமக்கல் ப.இராணி, மோகனூர் ஒன்றியத்திற்குட்பட்ட குமரிபாளையம் ஊராட்சி மாமரத்துபட்டி பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரசாரத்தின் போது பொதுமக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியின் சாதனைகள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து விளக்கி, ஆதரவு திரட்டினார். பெண்கள், இளைஞர்கள் மற்றும் மூத்த குடிமக்களிடம் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி, அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் மோகனூர் ஒன்றிய கழக செயலாளர். பெ.நவலடி முன்னிலையில், திமுக நிர்வாகிகள், உடன்பிறப்புகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு, வாக்கு சேகரிப்பு பணிகளில் ஈடுபட்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் கழக வேட்பாளர் ரேவதி மாதேஸ்வரனை ஆதரித்து கழக அரசின் சாதனைகளை சொல்லி உதய சூரியன் சின்னத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., வாக்கு சேகரித்தார். அப்போது மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பரமத்தி வேலூரில் கே.எஸ்.மூர்த்தி வாக்கு சேகரிப்பு!

நாமக்கல், ஏப்.15-

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட பரமத்தி வடக்கு ஒன்றியத்திற்கு செருக்கலை, கோலாரம், கோதூர் ராமதேவம், பிராந்தகம், மேல் சாத்தம்பூர், நடந்தை, சிரப்பள்ளி, குன்னமலை, நல்லூர், சித்தம்பூண்டி, அணியாபுரம் உள்ளிட்ட ஊராட்சிகளில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், திமுக வேட்பாளருமான கே. எஸ்.மூர்த்தி தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பொதுமக்களிடம் பேசிய வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி மீண்டும் திமுக ஆட்சி அமைந்த உடன் தலைவர் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும் இப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என வாக்குறுதி அளித்தார்.

பிரச்சாரத்தின் போது பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் தன்ராஜ், நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி தலைவர் அருண் உட்பட பொறுப்பாளர்கள் பலர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## த.க. பாலசுந்தரம்

**ஏப்ரல் 15 (2008)**



**தி.மு.கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.**

**வாலாசா நகர துணைச் செயலாளராகவும் பின்னர் 26 ஆண்டுகள் தொடர்ந்து நகரச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**கழக பொதுக்குழு உறுப்பினராவும் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக 1962ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூர் சிறையில் 70 நாட்கள் பேரறிஞர் அண்ணாவுடன் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**